## 10. நான் விழிக்கும் போது உமது

### பல்லவி

நான் விழிக்கும் போது உமது சாயலில்
திருப்தியாகனும் தேவனே

### அனுபல்லவி

*நிரப்பும் என்னை நிரப்பும் என் இயேசுவே*
*நிரப்பும் என்னை நிரப்பும் உம் ஆவியால்*

### சரணங்கள்

1. உம்மை போல் ஜெபிக்க வேண்டும்
ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும்
ஆத்தும பாரத்தால் - என்
உள்ளம் நிரம்ப வேண்டும்
- நிரப்பும் என்னை

2. உம்மை போல் நேசிக்க வேண்டும்
உம்மை போல் மன்னிக்க வேண்டும்
உமது நற்குணங்கள்
என்னிலே வளர வேண்டும்
- நிரப்பும் என்னை

3. உம்மை போல் பேச வேண்டும்
உம்மை போல் நடக்க வேண்டும்
உமது வாழ்க்கையே
என் வாழ்வில் வெளிபடனும்
- நிரப்பும் என்னை